# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

முன்னிலை :– திருமதி. எஸ். தமிழ்செல்வி, பி.ஏ.,எல்.எல்.எம்.,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
மயிலாடுதுறை.

அ.சா.30 நாள் 16.10.2025

| CC. No. | 237/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயபால் | த/பெ. | மணிவேந்தர் |
| வயது | 55 | தொழில் | கூலி |
| கிராமம் | மேலமணக்குடி | தாலுக்கா | மயிலாடுதுறை |

(1 எதிரி ஆஜர், 2ம் மற்றும் 3ம் எதிரிகள் ஆஜர் இல்லை. பி.என்.எஸ்.எஸ். சட்டப்பிரிவு 355–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் தற்போது பாண்டூரில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். நான் R.S.K. Enterprises உணவு பொருள் நிறுவனத்தில் விற்பனையாளராக 2014 வருடத்திலிருந்து 2016 வரை பணிபுரிந்தேன். எங்கள் நிறுவனத்திலிருந்து MCCW கூட்டுறவு நிறுவனத்திற்கு sunrises, Cerelac போன்ற உணவுபொருட்களை சப்ளை செய்து வந்தோம். 2014 வருடம் வணிக குற்றப்புலனாய்வு பிரிவு போலீசார் என்னிடம் வந்து MCCW expiry return Register –ல் குறிப்பிட்ட உள்ளவாறு 2014 முதல் 2016 வரை காலக்கட்டத்தில் காலவதியான பொருட்கள் திருப்பப்பட்டுள்ளனவா என்று கேட்டார்கள். நான் எங்கள் நிறுவனத்தில் உள்ள பதிவேட்டை பார்த்து அவ்வாறு எதுவும் திருப்பபடவில்லை என்று சொன்னேன். மேலும், அது குறித்து எந்த கையெழுத்தும் நான் போடவில்லை என்று சொன்னே். போலீசார் என்னை விசாரித்தனர்.

CJM, MAYILADUTHURAI.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :–

2011 முதல் 2012 வரையிலான காலக்கட்டத்தில் நான் R.S.K. Enterprises பணிபுரியவில்லை. நான் 2014 முதல் 2016 வரை தான் பணிபுரிந்தேன். முதல் விசாரணையில் நான் பார்த்ததாக கூறிய எங்கள் நிறுவனத்திலிருந்த பதிவேட்டை எனது உரிமையாளர் பாண்டுரெங்கன் பராமரித்து வந்தார். நான் எங்கள் R.S.K. Enterprises–ல் பணிபுரிந்த காலத்தில் நான் விற்பனையாளராகத்தான் பணிபுரிந்தேன். கடையின் உரிமையாளர் பாண்டுரெங்கனை போலீசார் விசாரிக்கவில்லை. நான் எங்கள் R.S.K. Enterprises–ல் பராமரித்து வந்ததாக சொல்லப்படும் அந்த பராமரிப்பு Register–யை பார்த்து போலீசாரிடம் அவ்வாறு எந்த காலவதியான பொருட்களையும் பெறவில்லை என்று சொல்லவில்லை. நான் பணிபுரிந்த காலக்கட்டத்தில்தான் காலவதியான பொருட்களை MCCW மருந்தகப்பிரிவில் பெறவில்லை என்று தான் போலீசாரிடம் கூறினேன். 2011 முதல் 2012 வரையிலான காலக்கட்டத்தில் MCCW மருந்தகப்பிரிவில் காலவதியான பொருட்களை R.S.K. Enterprises பொருட்களை திரும்ப பெற்றதா என்பது எனக்கு தெரியாது.

<u>மறு விசாரணை</u> :–

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.